முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

I.P. No. 28/2019

தேதி : 17–03–2026

(எ.ம.சா.1) – திரு.சீனிவாசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் கடையில் 08.06.2019ம் தேதி ரூ.11,89,053/– மதிப்புள்ள கம்பி, சிமெண்ட் மற்றும் இதர சாமான்களை பெற்றுக்கொண்டு, அதற்கு 15.06.2019ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வங்கி கணக்கு வைத்துள்ள TMB காசோலையை மனுதாரரிடம் கொடுத்தார் என்றும், அதை மனுதாரர் தனது வங்கியான பழனி கனரா வங்கி கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்தபோது மேற்படி காசோலை போதிய பணம் இல்லாததால் திருப்பப்பட்டது என்றால் அதைபற்றி தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் தன்னடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரியும், மனுதாரரை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தான் மேற்படி காசோலையை கொடுத்தார் என்றால் அதைபற்றி தெரியாது. அந்த காசோலையை வைத்து மாண்புமிகு மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் OS 190/2019 வழக்கு தாக்கல் செய்து சாதகமாக தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். 06.06.2019ம் தேதி 1 முதல் 4ம் எதிர்மனுதாரர்களிடம் மனு 1வது லக்க சொத்தை நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 12.06.2019ம் தேதி குறைவு பதிவு கட்டணத்தை நான் செலுத்தியிருந்தேன் என்றால் சரிதான். 06.06.2019ம் தேதியன்று 1, 3ம் எதிர்மனுதாரர்களிடம் மனு 2 லக்க சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 2ம் லக்க சொத்திற்கும் 12.06.2019ம் தேதி குறைவு பதிவு கட்டணத்தை நான் செலுத்தியிருந்தேன் என்றால் இல்லை.

2. நான் சொல்வது என்றும், ம.சா.ஆ.4 ஆவணத்தை பார்த்தாலே நான் குறைவு கட்டணத்தை செலுத்தியுள்ளது துலங்குகிறது என்றால் ஆமாம், நான் மொத்தமாக செலுத்தியதால் தெரியவில்லை. 19.06.2019ம் தேதி 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து 6ம் எதிர்மனுதாரர் மனு 3ம் லக்க சொத்தை கிரையம்

வாங்கியுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் அவர் கிரையம் வாங்கியதை சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம், அவர் கிரையம் வாங்கும்போது தெரியாது, இம்மனு தாக்கல் செய்த பின்னர் தெரியும். எனக்கு கிரையம் செய்த பின்னர் 1, 3ம் எதிர்மனுதாரர்கள் 50 நபர்கள் மீது IP 26/2019 வழக்கை 27.08.2019ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த மனுவில் இந்த மனுவின் மனுதாரர் 48வது நபராக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

3. எனவே, மனுதாரருக்கு அவர் தரவேண்டிய தொகையையும், மற்ற கடன்தாரர்களையும் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மலரணையாக 1, 2ம் லக்க சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, மேற்படி IP மனுவில் என்னுடைய பெயரும் உள்ளது. எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் மலரணையாக கிரையம் செய்துள்ளதால் அந்த ஆவணத்தின்மூலம் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் நல்லெண்ண கிரையதாரர் அல்ல என்றால் சரியல்ல. 1,2ம்லக்க சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் மேலும் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், மனுதாரரும் 1 முதல் 4ம் எதிர்மனுதாரர்களும் சேர்ந்து கொண்டு உண்மைக்கு மாறாக கட்சி செய்து வருவதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

ஒம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.